தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில்

# தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி: கலெக்டர் துரை.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது



தென்காசி மார்ச்.25 :
தென்காசி மாவட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்கிடையே தமிழர்களின் மரபையும் ,தமிழ்க பெருமிதத்தையும் உணர்த்தும் வகையில் 2ம் கட்ட தமிழ் கனவு, தமிழ் மரபும றறும் பண்பாட்டுபரப்புரை )ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.மாணவ, மாணவிகள் அனைவருக்கும் வழிகாட்டுதலுக்கான கையேடும் தமிழ்ப் பெருமிதம் என்கின்றகையேடும் வழங்கப்பட்டது.இதில் தமிழ் பெருமிதம் கையேட்டில் உள்ள ஏதேனும் ஒருபக்கத்தில் உள்ள தகவல் குறித்து ஒரு நிமிடத்தில் தங்களுடைய சிறப்பான கருத்துக்களை தெரிவித்த மாணவ, மாணவிகளை பாராட்டி பெருமிதசெல்வன் மற்றும் பெருமிதச் செல்வி என்கின்ற பட்டத்தோடு பரிசு வழங்கப்பட்டன.நிகழச்சி நடைபெற்ற வளாகத்தில் கலந்து கொண்டமாணவ,மாணவிகள் பயன்பெறும் வகையில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வி வழிகாட்டி குறித்த கண்காட்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் சார்பிலும், இதர கடன் உதவிகள் தொடர்பான கண்காட்சி மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் தாட்கோ நிறுவனத்தின் சார்பிலும் புத்தக அரங்குகள் மாவட்ட நூலகத்தின் சார்பிலும், சுய உதவி குழு தயாரித்த பொருட்களின் கண்காட்சி அரங்குகளும் ,முதன்மை கல்வி அலுவலகத்தின் மூலம் நான் முதல்வன் என்ற கண்காட்சி அரங்குகளும், மாவட்ட திறன் பயிற்சி துறை கண்காட்சி அரங்குகளும், மாவட்ட தொழில் மைய கண்காட்சி அரங்கு ஆகிய அரங்குகளில் மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தது.நிகழ்ச்சியில்,மாவட்டஆட்சித் தலைவர் பேசியதாவது,

தமிழ் மரபின் வளமையையும் ,பண்பாட்டின் பெருமையையும், சமூக விழிப்புணர்வையும், பொருளாதார முன்னேற்றம் குறித்த வாய்ப்புகளையும், இளம் தலைமுறையினருக்கு குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்கு முழுமையாக கடத்துவதற்கு மாபெரும் தமிழ்க் கனவு என்னும் இந்த பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தாங்கள் உணர்ந்ததை அடுத்துவரும் சந்ததியனருக்கு கொண்டு செல்லமுடியும் இதனால் விழிப்புணர்வுள்ள சமூகம் உருவாகும்.இந்தமாபெரும் தமிழ் கனவுநிகழ்ச்சியில் சிறப்புவிருந்தினர்களாக பங்கேற்றுள்ள ஸ்டாலின் குனசேகரன், ஓலை சுவடிகளும், கால சுவடுகளும் என்ற தலைப்பிலும் ஆறுமுக தமிழன், அறிவினைவிறிவுசெய் என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.நமது பண்பாட்டின் பெருமையை இளைய தலைமுறைக்கு குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்கு உணர்த்துவதென்பது ஆரோக்கியமான எதிர்கால சமூக கட்டமைப்பின் ஒரு முக்கிய பங்காகும.; எனவே தமிழ்நாடு முழுவதும் உள்ள நூறு கல்லூரிகளில் தமிழர் மரபும் ,நாகரிகமும், சமூகநீதி, பெண்கள் மேம்பாடு, சமூக பொருளாதார முன்னேற்றம் மொழி மற்றும் இலக்கியம், கலை மற்றும் பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி, தொழில் முனைவுக்கான முன்னெடுப்புகள், கல்வி புரட்சி,அரசின் திட்டங்கள் மற்றும் அதனை செயல்படுத்தும் முறைகள் முதலிய தலைப்புகளின் கீழ் சிறந்த சொற்பொழிவாளர்களை கொண்டு மாபெரும் தமிழ் கனவு சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றன.அந்தவகையில் இந்நிகழ்ச்சி தென்காசி மாவட்டத்தில் நடைபெறுவது நமக்கு பெரிய மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அளிக்கிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.இரவிசந்திரன், பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரி முதல்வர் கனகபாண்டியன், தென்காசி வருவாய் கோட்டாசியர் கங்காதேவி, அலுவலக மேலாளார்(பொது) ஹரிஹரன் ,உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் ,மற்றும் அரசு அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ ,மாணவியர்கள் ஆகியோர்; கலந்து கொண்டனர்.

செங்கோட்டை திமுக சார்பில்

# முதலமைச்சர் முக.ஸ்டாலின் 70வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்: அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ் பாரதி பங்கேற்பு

செங்கோட்டை, மார்ச்.25-
செங்கோட்டை தாலுகா அலுவலம் அருகில் வைத்து நகர திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் முக.ஸ்டாலின் 70-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா: நடந்தது.



கூட்டத்திற்கு செங்கோட்டை நகர திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் வழக்கறிஞர் ஆ. வெங்கடேசன் தலைமைதாங்கினார். நகர அவைத் தலைவர் காளி நகர துணைச் செயலாளர்கள் ஜோதிமணி, முத்துசரோஜா, ராஜா மாவட்ட பிரதிநிதிகள் பீர்முகமது, மணிகண்டன் ஆகியோர் முன்னிலைவகித்தனர். நகர பொருளாளர் தில்லைநடராஜன் வரவேற்புரை ஆற்றினார் கழக அமைப்புச் செயலாளர் ஆர்எஸ் பாரதி, கழக சட்டத்துறை துணைச் செயலாளர் சூர்யாவெற்றி கொண்டான் தென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் பொ.சிவபத்மநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தரமகாலிங்கம் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி, சேக்தாவூது, சேசுராஜன் , மாவட்ட துணைச் செயலாளர்கள் கென்னடி, கனிமொழி மாவட்ட பொருளாளர் செரீப், பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், சாமித்துரை, ராஜேஸ்வரன், தமிழ்செல்வி, அருள் செங்கோட்டை ஒன்றிய செயலாளர் ரவிசங்கர், தென்காசி கிழக்கு ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சீனித்துரை, தென்காசி மேற்கு ஒன்றிய செயலாளர் திவான்ஒலி, ஆலங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ்மாயவன் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் லிங்கராஜ், ஆ.சண்முகராஜா, மு.நசீர், பேபி ரஜப் பாத்திமா, கோவிந்தராஜ், தொமுச மத்திய சங்க துணைச்செயலாளர் ரவீந்தரன் தென்காசி யூனியன் சேர்மன் ஷேக்அப்துல்லா, காதர்அண்ணாவி, பேரூர் செயலாளர்கள் குற்றாலம் குட்டி என்ற சங்கர்,பண்பொழி ராஜராஜன், புதூர் கோபால், இலஞ்சி முத்தையா, பண்பொழி முன்னாள் தலைவர் மங்கள விநாயகம், பெரியபிள்ளைவலசை ஊராட்சி மன்றத் தலைவர் வேலுச்சாமி, வார்டு கழக நிர்வாகிகள் சங்கர்கணேஷ், பாலு, மாரியப்பன், இப்ராகிம், சேட்டு (எ) சேக்மதார், குட்டிராஜா, வேலுமணி, காந்திபாபு, மணிகண்டன், கணேசன், ஆறுமுகத் தேவர், விஜயபாரதன், மாது,கழகப் பேச்சாளர்கள் செங்கை குற்றாலிங்கம், கருப்பணன், ஆயிரப்பேரிமுத்துவேல், வெல்டிங்மாரியப்பன், மரியராஜ், ஆர்விஎஸ் முத்துசாமி, நெல்லைமுத்தையா, மாரியப்பன் நகர இளைஞரணி பீர்முகம்மது, மனோஜ், மணிகண்டன், வினோத், பிரதிநிதிகள் கல்யாணி, அருண்குமார், நாட்டாமை ஆறுமுகம்,மல்லிகா, சரோஜா, பரமசிவன்,காதர் சேட், கண்ணன்,சரவணன், பாலச்சந்தர், ஆகாஷ், தங்கம், கனகராஜ், டாக்டர்மாரியப்பன், சிவஇசக்கிமுத்து, பொன்னாட்சா, ஆட்டோமாரியப்பன் ரகுமான்கான், மைதீன் பிச்சை, கடுவாசண்முகம், வேலுச்சாமி, காசிமணி, ஈஸ்வரமூர்த்தி, கணபதி சார்பு அணி அமைப்பாளர்கள் வக்கீல்வேலுச்சாமி, இசக்கி பாண்டியன், கோமதிநாயகம், வீராணம் சேக்முகம்மது, ஹக்கீம், இஞ்சிஇஸ்மாயில், தென்காசி சமீம், ராமராஜன், கேசவராம்சிங், நகர சார்பு அணி நிர்வாகிகள் இலஞ்சி ஜெயக்குமார்பாண்டியன், கொட்டாகுளம்கோமதிநாயகம், இலஞ்சிவசந்த், நவநீதகிருஷ்ணன் குற்றாலம்சுரேஷ், கொக்கரக்கோ கோவிந்தன், சிவக்குமார், லிங்கராஜ், மணி, டக்குமுருகன் கவுன்சிலர் மேரி மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட பிரதிநிதி சுப்பிரமணியன் நன்றியுரை ஆற்றினார்.

தென்காசி நகர திமுக சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்



தென்காசி மார்ச்.25-
தமிழ்நாடு முதலமைச்சரும் திராவிட முன்னேற்ற கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாபெரும் பொதுக்கூட்டம் என தென்காசி நகர திமுக சார்பில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு தென்காசி நகர கழக செயலாளரும், தென்காசி நகர் மன்றத் தலைவருமான சாதிர் தலைமை தாங்கினார். நகர பொருளாளர் சேக்பரீத், நகர துணை செயலாளர்கள் ராம்துரை, பால்ராஜ், சூரியகலா, மாவட்ட பிரதிநிதிகள் பால சுப்பிரமணியன், முகைதீன் பிச்சை ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி நகர்மன்ற துணைத்தலைவரும், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவருமான கேஎன்எல் சுப்பையா வரவேற்புரை ஆற்றினார். ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி விழாப் பேருரையாற்றினார். தலைமை கழக சட்டத்துறை துணை செயலாளர் வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், தென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன், தென்காசி மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், தலைமை கழக பேச்சாளர்கள் இஸ்மாயில், வேங்கை சந்திரசேகர், கழக பேச்சாளார் முத்துவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட கழக அவைத்தலைவர் சுந்தரமகாலிங்கம், மாவட்ட கழக துணை செயலாளர்கள் தமிழ்செல்வன், கென்னடி, கனிமொழி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லத்துரை, முத்துப்பாண்டி, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், ஒன்றிய குழுத்தலைவர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் கட்சி நிர்வாகிகள், நகர கழக முன்னோடிகள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கோவில்பட்டியூனியன்அலுவலகத்தில்சேர்மன்கஸ்தூரிசுப்புராஜ்தலைமையில்,வைஸ்சேர்மன் பழனிச்சாமி, ஆணையாளர்ராஜேஸ்குமார், மேலாளர்முத்துபாண்டிஆகியோர்முன்னிலையில் கிராம பஞ்சாயத்துதலைவர்களுக்கு பயிற்சிமுகாம் நடந்தது.

## சாதனையாளர்களின் சங்கமம் நிகழ்ச்சி



கடையநல்லூர் மார்ச்.25
பால அருணாசலபுரம் சாதனா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பதிமூன்றாவது சாதனையாளர்களின் சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றது .இந்நிகழ்ச்சிக்கு மேனாள் தென்காசி மாவட்ட கல்வி அலுவலர் நல்லாசிரியர் முனைவர் சுடலை தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் மயில்கண்ணு ரமேஷ் அனைவரையும் வரவேற்றார். பள்ளி உரிமையாளர் ராமாத்தம்மாள் மற்றும் ராஜம்மாள் முத்தையா ஆகியோர் முன்னிலை வகித்தனர் . விழா நோக்க உரையை பள்ளி தாளாளர் ரமேஷ் கல்வி பற்றியும் அடுத்த தலைமுறைக்கான கல்வியின் சிறப்பு பற்றியும் எடுத்துக் கூறினார். சிறப்பு விருந்தினராக வலசை முப்புடாதி அம்மன் கோவில் திருப்பணிகுழு தலைவர் தொழிலதிபர் வரதராஜன் கலந்து கொண்டு கல்வியில் சிறந்த மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றுகள் , வாழ்த்துரை வழங்கி பள்ளி வளர்ச்சிக்காக நிதி உதவியும் வழங்கினார் . பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவர் ராஜன் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பேசினார். பெற்றோர் ஆசிரியர் கழக சோனியா செல்லத்துரை பள்ளியின் செயல்பாடு குறித்து பேசினார் . பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக ஆசிரியை மகேஸ்வரி நன்றி கூறினார்.

## செங்கோட்டை பென்குயின் மருத்துவமனையில் இலவச பல் மருத்துவ முகாம்



செங்கோட்டை மார்ச்.25:
செங்கோட்டை பென்குயின் மருத்துவமனையில் பல் சிகிச்சை பிரிவு வழங்கும் இலவச பல் மருத்துவ முகாம் நடைபெற்றது. செங்கோட்டை சுப்புலெட்சுமி மருத்துவமனை தலைமை மருத்துவர் கிருஷ்ணன் இலவச பல் மருத்துவ முகாமினை தொடங்கிவைத்தார். பென்குயின் மருத்துவமனை நிர்வாக இயக்குநர்கள் மருத்துவர் சரவணகார்த்திகேயன், மருத்துவர் ராஜலெட்சுமி ஆகியோர் வரவேற்று பேசினர். இம்முகாமில் பல் சிறப்பு மருத்துவர்கள் சுலைகா ஆப்ரீன், வீணா ஆர் பட்டேல், கிருஷ்ண வினோத் ஆகியோர் கலந்து கொண்டு நோயாளிகளுக்கு பல் சம்பந்தமான மருத்துவ சிகிச்சையளித்தனர். முகாமில் பல் சம்பந்தமான ஆலோசனைகள், பல் சொத்தை கண்டறிதல், ஈறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், செயற்கை பல் கட்டுவது, பல் மற்றும் தாடை சீரமைப்புகள், பல்வேர் சிகிச்சைகள் ஆகியவற்றிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இம்முகாமில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் பெற்று சென்றனர். முகாம் ஏற்பாடுகளை பொதுமேலாளர் ஸ்ரீதர் மற்றும் பென்குயின் மருத்துவமனை செவிலியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்

தென்காசி மார்ச்.25
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைதண்டனை வழங்கியதை கண்டித்து தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான பழனிநாடார் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் தென்காசி பஞ்சாயத்து துணைத்தலைவர் உதய கிருஷ்ணன், மாநில பொதுக் குழு உறுப்பினர் சட்டநாதன், மாவட்ட பொதுச்செயலாளர் பிரபாகரன், நிர்வாகிகள் சந்தோஷ், தேவேந்திரன், சபரி, தெப்பகுளம் கண்ணன், கோவிந்தன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## ஜாக்டோ ஜியோ சார்பில் மனித சங்கிலி போராட்டம்

நான்குநேரி, மார்ச். 25-
நான்குநேரி பஸ்ஸ்டாண்ட் அருகே ஜாக்டோ ஜியா சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜான் பாரதிதாசன் தலைமையில் நேற்று மாலையில் ஆசிரியர். ஆசிரியைகள் சுமார் 60 திற்கும் மேற்பட்டவர்கள் மணித சங்கிலி போராட்டம் நடத்தினர். இதில் பழைய ஓய்வூதிய திட்டம் அமுல்படுத்துதல், இடைநிலை ஆசிரியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கை நிறைவேற்ற வலியுறுத்தி மனித சங்கிலி போராட்டம் நடந்தது.

வெங்காடம்பட்டியில்

# ரூ 26.5 லட்சத்தில் திட்டப்பணிகள்: சிவபத்மநாதன் தொடங்கி வைத்தார்



கடையம், மார்ச் 25:
வெங்காடம்பட்டி ஊராட்சியில் ரூ.26.5 லட்சம் மதிப்பிலான திட்டப்பணிகளை திமுக மாவட்ட செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் தொடங்கி வைத்தார்.

கடையம் ஒன்றியம், வெங்காடமபட்டி ஊராட்சிக் குட்பட்ட கோவிலூற்று கிராமத்தில் ரூ.15 லட்சத்தில் புதிய பாலம், வெங்காடம்பட்டியில்; ரூ 6.5 லட்சத்தில் புதிய வாருகால், மைலப்பபுரத்தில் ரூ 5 லட்சத்தில் புதிய சிமெண்ட் சாலை ஆகிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. வடக்கு ஒன்றிய திமுக செயலாளரும், யூனியன் துணை சேர்மனுமான மகேஷ் மாயவன் தலைமை வகித்தார்.மாவட்ட பிரதிநிதி ரவி சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் சங்கர் வரவேற்றார்.

தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் பொ.சிவ பத்மநாதன்சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திட்டப்பணிகளை தொடங்கி வைத்து பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் தமிழ்ச் செல்வன், சேர்வைகாரன் பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர் ரம்யா ராம்குமார், மற்றும் ராம்ராஜ், கானா முருகன், ஏபிஎன் குணா, ராஜேஷ், சுதன், சங்கர் ராம், அற்புதராஜ் ,மகாராஜா, முத்து ,சுப்பிரமணியன்,தங்க ராஜா, கடல் காமராஜ், வேல்சாமி, பரிதி, பன்னீர், ராமர் ,ஜெயராஜ், கதிரேசன்,அவைத்தலைவர் முருகன், கட்டேறிப்பட்டி செல்லத்துரை, அரசு ஒப்பந்ததாரர் பிரவீன், மதன், ஜெயராஜ், வேலுச்சாமி, இளங்கோ ,கார்த்திகேயன் ,பால்ராஜ்,கதிரேசன், திரவியம்,இளம்பரிதி சண்முகம், மேசியா சிங், குமார்,சுரேஷ் ஆறுமுகம்,குணசேகர் ,மகாலிங்கம், சுப்பிரமணியன், மகளிர் சுய உதவி குழு தலைவி தங்கத்தாய், சித்ரா, சுதா, மணிகண்டன், ராஜா, ஸ்டீபன் நீல், கந்தன், மோகன்,தானியல், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## டேக்வாண்டோ போட்டி: இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவர்கள் சாதனை



குற்றாலம் மார்ச்.25
மாவட்ட அளவிலான டேக்வாண்டோ போட்டியில் இலஞ்சி பாரத் மாண்டிசோரி பள்ளி மாணவர்கள் சாதனை. தென்காசி மாவட்ட டேக்வாண்டோ சங்கம் சார்பில் நடத்திய மாவட்ட அளவிலான டேக்வாண்டோ போட்டியானது எவரெஸ்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. போட்டியில் பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி, ஆக்ஸ் போர்டு, லயன்ஸ் மகாத்மா, மகரிஷி வித்யாலயா, ஸ்ரீராம் வித்யாலயா, உள்ளிட்ட பல பள்ளி மாணவ மாணவிகள் பல்வேறு வகையான எடை பிரிவுகளில் கலந்து கொண்டனர். இதில் பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சந்தோஷ், திவான், தேவைஷ்காளிதாஸ், ஆகியோர் தங்கப் பதக்கமும், சர்வீன்தனித்கர், மஹதிரஹ்மான், வெள்ளி பதக்கமும், தீபக்,கிளாட்வின், ரித்திஷ்விஸ்வா, லட்சுமிவேல் ஆகியோர் வெண்கலப் பதக்கமும் வென்று சாதனை படைத்தனர். போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன். கல்வி ஆலோசகர் உஷாரமேஷ், இயக்குனர் இராதா பிரியா ஆகியோர் பாராட்டினர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352 Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



கோவில்பட்டி ஸ்ரீராம்நகர் பூங்கா அருகில் சிறுவர்பூங்கா அடிக்கல் நாட்டுவிழா நகர்மன்ற தலைவர் கருணாநிதி தலைமையில், ஆணையாளர் ராஜாராம் முன்னிலையில் நடந்தது. பொறியாளர் ரமேஷ் சுகாதாரஅலுவலர் நாராயணன், மேலாளர் பெருமாள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## நான்குநேரி-மேலப்பாளையம் வரை அதிவிரைவு ரயில் சோதனை ஓட்டம்

நான்குநேரி, மார்ச். 25-
திருவனந்தபுரம் ரயில்வே கோட்டம் நாகர்கோயிலிருந்து மேலப்பாளையம் வரை மின் மயமாக்கலுடன் புதிய இரட்டை ரயில் பாதை அமைக்கும் பணிகள் நான்கு கட்டமாக நடந்து வருகிறது. இதில் முதல் கட்டமாக ஆரல்வாய் மொழியில் இருந்து வள்ளியூர் வரையும் இரண்டாம் கட்டமாக வள்ளியூரில் இருந்து நான்குநேரி வரை மின்மயமாக்களுடன் கூடிய இரட்டை ரயில் பாதைப்பணிகள் நிறைவடைந்து ரயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. மூன்றாம் கட்டமாக நான்குனேரி முதல் மேலப்பாளையம் வரையிலும் மின் மயமாக்களுடன் கூடிய இரட்டை ரயில் பாதை பணிகள் நிறைவடைந்துள்ளது. இதனை தொடர்ந்து தென்சரக ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஆனந்த் மதுகர் சௌத்ரி நேற்று காலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது புதிதாக அமைக்கப்பட்ட இரட்டை அகல ரயில் பாதைகளின் தரம், மின்மயமாக்கல் பணிகளின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் ஆய்வு இதில் புதிதாக அமைக்கப்பட்ட ரயில்வே தண்டவாளம் மின் பாதை மற்றும் கிராசிங் கருவிகள் செயல்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் நான்குனேரியில் இருந்து மேலப்பாளையம் வரையில் அதிவேக ரயில் சோதனை ஓட்டம் நடந்தது. இந்த ரயிலில் தென்சரக ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஆனந்த் மதுகர் சௌத்ரி, திருவனந்தபுரம் கோட்ட மேலாளர் சச்சிந்தர் மோகன்ராஜ் மற்றும் அதிகாரிகள் பயணம் செய்தனர். இந்த புதிய ரயில் பாதையில் சுமார் 120 கிலோமீட்டர் வேகத்தில் ரயிலை செலுத்தி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

# எர்ரம்பட்டி முத்தாலம்மன் கோவிலில் 48வது நாள் மண்டல பூஜை விழா



அலங்காநல்லூர். மார்ச் 25-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள எர்ரம்பட்டியில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முத்தாலம்மன், காளியம்மன், அய்யனார் அம்மசி அம்மன் உள்ளிட்ட பரிவார தெய்வங்களின் மகா கும்பாபிஷேக விழா கடந்த 48 நாட்களுக்கு முன்பு நடைபெற்றது.

நேற்று கோவில் வளாகப் பகுதியில் மண்டல பூஜைக்கான ஏற்பாடுகளை கிராம மக்களுடன் சேர்ந்து சிவாச்சாரியர்கள் வேள்வியாக யாகம் வளர்த்து கால யாக பூஜையுடன் கணபதி ஹோமம், மஹா சுதர்சன ஹோமம், விநாயகர் பூஜை, மஹாலக்ஷ்மி பூஜை, கோ பூஜை, உள்ளிட்ட பல்வேறு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

தொடர்ந்து சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி ராமேஸ்வரம், அழகர்கோவில், உள்ளிட்ட புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு கொண்டு வரப்பட்ட புனித நீரை கோவிலை சுற்றி வலம் வந்து பின் கோவில் கருவறையில் அமைந்துள்ள ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ முத்தாலம்மன் ஸ்ரீ காளியம்மன் ஸ்ரீ அய்யனார் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு கருடன் வட்டமிட மேல தாளம் முழங்க புனித நீர் ஊற்றப்பட்டு 48-வது நாள் மண்டல அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கிராம நாட்டாமை, கிராம கரைகாரர்கள் மற்றும் பொது மக்கள் செய்திருந்தனர்.



உலக காசநோய் தினத்தையொட்டி விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்ற விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் கேடயங்களை கலெக்டர் ஜெயசீலன் வழங்கினார்.

# திருமங்கலத்தில் கியாஸ் விலை உயர்வை கண்டித்து அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



திருமங்கலம், மார்ச் 25-

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பெட்ரோல் டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை மேற்கு மாவட்ட அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு சிலிண்டர் விலை மற்றும் சுங்கச் சாவடி கட்டண உயர்வு காரணமாக மத்திய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்பாட்டம் திருமங்கலம் நகர் ராஜாஜி சிலை முன்பு நேற்று நடைபெற்றது.

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி தேசிய துணைத்தலைவர், தமிழ் மாநில பொதுச்செயலாளர் முன்னாள் முன்னாள் எம்.எல்.ஏ கதிரவன் ஆலோசனையின் பேரில்மதுரை மேற்கு மாவட்ட செயலாளர், செல்லம்பட்டி துணைச் சேர்மன் மணிகண்டன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திருமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் பிரபாகரன் முன்னிலை வைத்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மேற்கு மாவட்ட தலைவர் ஆதிசேடன்,மேற்கு மாவட்ட ஐடிவிங் செயலாளர் தனம் கோகுல், மேற்கு மாவட்ட இளைஞரணி தலைவர் விக்னேஷ், மாவட்ட இளைஞரணி செயலாளர் அலெக்ஸ் பாண்டியன் மற்றும் மாநில மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.ஆர்ப்பாட்டத்தின் போது மத்திய அரசுக்கு எதிராகவும் பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்தும் கண்டன கோஷங்கள் எழுப்பபப்பட்டது.

# பரமக்குடியில் ஜாக்டோ ஜியோ சார்பில் மனித சங்கிலி போராட்டம்



பரமக்குடி, மார்ச் 25-

பரமக்குடியில் ஜாக்டோ ஜியோ அரசு ஊழியர்கள் சங்கம் பஸ் நிலையத்தில் இருந்து ஒட்டப்பாலம் பகுதி வரை மனித சங்கிலி போராட்டம்நடத்தினர். போராட்டத்திற்கு மாவட்ட.ஒருங்கிணைப்பாளர்கள் சேகர், பூப்பாண்டியன் ஆகியோர் தலைமையில் நடந்தது.

உயர்மட்ட குழு நிர்வாகிகள் மற்றும் அனைத்து அரசு ஊழியர்கள் சங்க நிர்வாகிகள் ஒருங்கிணைத்தனர். 01.01.2003 க்கு பிறகு அரசு பணிகள் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமல்படுத்த வேண்டும், 2021 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்று மூன்று முறை அறிவிக்கப்பட்ட அகவிலைப்படியானது ஆறு மாதம் கடந்து வாங்கியதை மத்திய அரசு அறிவிக்க அதே தேதியில் நிலுவைத் தொகையினை வழங்க வேண்டும்,

காலம் வரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பினை உடனடியாக வழங்க வேண்டும், அனைத்து நிலை ஆசிரியர்களுக்கு ஊதிய முரண்பாட்டினை சரி செய்ய வேண்டும், அரசின் பல்வேறு துறைகளில் 30% மேலாக உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

1000-க்கும் மேற்பட்ட ஜாக்டோ ஜியோ சங்க உறுப்பினர் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

# அம்பலத்தாடி கிராமத்தில் ஆண்டிச்சாமி திருக்கோவில் கும்பாபிஷேக விழா

அலங்காநல்லூர், மார்ச் 25-

மதுரை மேற்கு ஒன்றியம் சிறுவாலை ஜமீனை சார்ந்த அம்பலத்தாடி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஆண்டிச்சாமி, ஸ்ரீ கருப்பணசாமி, ஸ்ரீ மதுரைவீரன்சாமி, ஸ்ரீ தொழுதாயிஅம்மன், ஸ்ரீ பட்டவன் சுவாமி வழிபாட்டு பங்காளிகள் குலதெய்வமாக வழிபடுகின்ற குடிமக்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ பால முருகன் (எ) ஸ்ரீ ஆண்டிச்சாமி திருக்கோவிலில் மகா கும்பாபிஷேக விழா நடந்தது.



இதில் 4 கால யாக பூஜையுடன் கணபதி ஹோமம், மஹா சுதர்சன ஹோமம், விநாயகர் பூஜை, மஹாலக்ஷ்மி பூஜை, கோ பூஜை, உள்ளிட்ட பல்வேறு பூஜைகளை தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடாகி காசி, கங்கை, ராமேஸ்வரம், அழகர்கோவில், திருச்செந்தூர், உள்ளிட்ட புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரை கோவிலை சுற்றி வலம் வந்து பின் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வானத்தில் கருடன் வட்டமிட மேல தாளம் முழங்க கும்ப கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து சுவாமிக்கு அபிஷேகமும், தீபாரதனைகளும் நடந்தது. கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பூஜை பொருட்களும் அன்னதானம் வழங்கப்பட்டது.விழா ஏற்பாடுகளை ஸ்ரீ ஆண்டிச்சாமி, கோவில் பங்காளிகள் மற்றும் அம்பலத்தாடி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# நத்தத்தில் காங்கிரசார் ஆர்ப்பாட்டம்




நத்தம், மார்,25

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ்நிலைய ரவுண்டானா முன்பு காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதற்கு மாவட்ட துணை தலைவர் துரைச்சாமி தலைமை தாங்கினார். வட்டார தலைவர் பழனியப்பன் முன்னிலை வகித்தார்.

இதில் ராகுல்காந்திக்கு சிறைதண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பபட்டது. இதில் நிர்வாகிகள் கருப்பையா, அம்சவள்ளி, அருமைநாதன், தங்கசாமி, காமராசு, முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஹெச் & எம் புதிய ஸ்பிரிங்க் 2023 கலெக்ஷனுடன் ஸ்டைலாக பயணிப்பீர்

சென்னை, மார்ச் 25-

புதிய சீசனுக்கான ஸ்டைல் பரிமாற்றச் சாத்தியக் கூறுகளை ஹெச்&எம் ஸ்ப்ரிங்க் 2023 கலெக்ஷன் தொடர்ந்து ஆய்வு செய்கிறது. புராண காலத்து ஐஸ்லா ஹென்ஸ் தீவுகள் மீது ஈர்க்கப்பட்டு, இந்தக் கலெக்ஷன் வாடிக்கையாளர் அனுபவிப்பதைக், கிராஃப்டெட் சாஃப்ட் டோன், போல்ட் ஷேப், டேக்டைல் டெக்சர்ஸ் எனப் பல்வேறு கண்கவர் வகைகளில் ஊக்குவிக்கிறது. ஹெச்&எம் ஸ்ப்ரிங்க் 2023 கலெக்ஷன் இரு தேதிகளில் தனது பொருள்களை அறிமுகப்படுத்தும், ப்ரீ-ஸ்பிரிங்க் அறிமுகம் ஆன்லைன் மற்றும் ஸ்டோர்ஸ்களில் 2023 மார்ச் 9இலும், ஸ்ப்ரிங்க் அறிமுகம் 2023 மார்ச் 30இலும் நடைபெறும்.

ஐஸ்லா ஹென்ஸ் ஸ்ப்ரிங்க் 2023க்கான ஸ்டைல் இடமாகும். ஒவ்வொரு மூலையிலும் உள்ள, கவர்ச்சி, சாகசம் மற்றும் படைப்பாற்றல் மூலம் பரிசோதிக்கவும், புதிதாக எதையேனும் முயற்சி செய்யவும், ஐஸ்லா ஹென்ஸ் தீவுகள் உங்களை ஊக்குவிக்கிறது. தெளிவான வண்ணத் தட்டுக்களை ஊக்குவிக்கும் நீல நிறத் தண்ணீர், பசுமையான புல்வெளிகள் ஆகிவற்றைக் கொண்ட இந்தக் கலெக்ஷனின் தாவரவியல் செல்வாக்கை உறுதிப்படுத்துகிறது. தீவின் கலை சிற்பங்கள் சமகால 3டி ஷில்லோட் ஸ்டைலைக்கு உத்வேகம் தருமா? அல்லது காட்டுத் தாவரங்கள் கிராஃபிக் அச்சு எடுக்கும் முயற்சிக்கு உங்களைத் தூண்டிவிடுமா? வித்தியாசமான ஸ்டைல், எண்ணங்கள் மற்றும் ஊக்கங்களுக்கு ஒரு முறை பயணித்துப் பாருங்களேன்? பரிமாற்றத்துக்கான இடம் இதுவே ஆகும்.

# ஆக்சிஸ் எஸ் அண்டு பி 500 ஈ.டி.எப் பண்ட் ஆப் பண்ட் அறிமுகம்

கோவை, மார்ச் 25-

இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் ஃபண்ட் ஹவுஸ்களில் ஒன்றான ஆக்சிஸ் மியூச்சுவல் ஃபண்ட், தங்களின் புதிய நிதி வழங்கலான ஆக்சிஸ் எஸ்அண்டுபி 500 ஈடிஎஃப் ஃபண்ட் ஆஃப் ஃபண்ட் வெளியீட்டை அறிவித்தது. இந்த புதிய நிதியானது. எஸ்அண்டுபி 500 டிஆர்ஐ பெஞ்ச்மார்க்கைப் பின்பற்றும். திரு. விநாயக் ஜெயநாத் இந்த நிதியை நிர்வகிப்பார் மற்றும் குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை ரூ. 500 மற்றும் அதன் பிறகு ரூ.1-இன் மடங்குகளில். வெளியேறும் சுமை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மீட்டெடுக்கப்பட்டாலோ அல்லது மாற்றப்பட்டாலோ 0.25 சதவீதம், ஒதுக்கீட்டின் 30 நாட்களுக்குள் ரிடீம் செய்யப்பட்டால் அல்லது ஸ்விட்ச்-அவுட் செய்யப்பட்டால் இல்லை.

குறிப்பிட்ட சொத்து வகைகளில் முதலீடு செய்யும் வழக்கமான பரஸ்பர நிதியைப் போலல்லாமல், ஃபண்ட் ஆஃப் ஃபண்ட், அதன் சொந்த திட்டங்கள் அல்லது பிற ஃபண்ட் ஹவுஸ் திட்டங்களில் முதலீடு செய்கிறது. சர்வதேச நிதியின் நிதிகளில் விஷயத்தில், இலக்கு நிதியின் முதலீட்டுத் தத்துவம் மற்றும் இடர் விவரம், நிதியின் நோக்கத்துடன் பொருந்துவதை உறுதி செய்வதன் மூலம், இந்த நிதி மேலாளர் சர்வதேச மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் அலகுகளில் முதலீடு செய்கிறார். ஒரு செயலற்ற முதலீட்டு உத்தியைப் பின்பற்றி, ஆக்சிஸ் எஸ்அண்டுபி 500 ஈடிஎஃப் ஃபண்ட் ஆஃப் ஃபண்ட், தகுதியான முதலீட்டுத் தொகை மற்றும் கிடைக்கும் தன்மைக்கு உட்பட்டு, எஸ் அண்டு பி 500 ஈ.டி.எஃப். ஐப் பிரதிபலிக்கும் வெளிநாட்டு எக்ஸ்சேஞ்ச் டிரேடட் ஃபண்டுகளின் யூனிட்கள் அல்லது பங்குகளில் குறைந்தபட்சம் 95 சதம் நிகர சொத்துக்களை முதலீடு செய்ய முயற்சிக்கிறது. மீதமுள்ளவை கடன் மற்றும் பணச் சந்தை முதலீடுகளில். மியூச்சுவல் ஃபண்ட் கட்டமைப்பைப் பொறுத்தவரை, முதலீட்டாளர்கள் எஸ்அண்டுபி-கள், எஸ்டிபி-கள் அண்டு மொத்த தொகை முதலீடுகள் போன்ற பல்வேறு முறையான விருப்பங்கள் மூலம் முதலீடு செய்யலாம்.



தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உலக காசநோய் தினத்தை முன்னிட்டு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவ, மாணவியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தை சார்ந்தவர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் ஷஜீவனா நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மீனாட்சி சுந்தரம் உள்ளார்.




மதுரைமாவட்டகலெக்டர்அலுவலககூட்டரங்கில்நேற்றுகலெக்டர்அனீஷ்சேகர்தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது.

# திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் பங்குனி பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் துவக்கம்

## கிரிவலப்பாதையை சீரமைக்க பக்தர்கள் கோரிக்கை

திருப்பரங்குன்றம், மார்ச் 25-



திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் நாளை 26-ம் தேதி பங்குனி பெருவிழா கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. திருவிழாவின் சிகர நிகழ்ச்சியாக அடுத்த (ஏப்ரல்) மாதம் 9-ம் தேதி மகா தேரோட்டம் நடக்கிறது. இந்த நிலையில் கிரிவல பாதையை சீரமைக்க வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோவில் வாசலில் இருந்து சுமார் 3 கி.மீ. சுற்றளவு கொண்ட கிரிவலப்பாதையில் பெரியதேர் வலம் வரும்.லட்சக்கணக்கான பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்து தரிசனம் செய்வார்கள். தேரோட்டத்திற்கு முதல் நாள் மாலை 6 மணியில் இருந்து விடிய, விடிய கிரிவலத்தில் பக்தர்கள் பல்வேறு நேர்த்திக்கடனை செலுத்துவார்கள். கிரிவலப்பாதை சுற்றிலுமாக பக்தர்களுக்கு ஏராளமானோர் தங்களது நேர்த்தியாக அன்னதானம் வழங்குவார்கள். .இதனையொட்டி கிரிவலப்பாதை சீராக இருக்க வேண்டும். அவனியாபுரம் ரோடு சந்திப்பில் இருந்து கல்வெட்டு குகை கோவில் வரை சுமார் ஒரு கி.மீ. சுற்றளவு வயல்வெளி சார்ந்த ஒரு பகுதியில் முட்செடிகள் வளர்ந்துள்ளன.

மேலும் கிரிவலப்பாதையில் உள்ள மின்கம்பங்களில் மின்விளக்குகள் கண்சிமிட்டுகிறது. அதனால் குறிப்பிட்ட தூரம் இருள் சூழ்ந்துள்ளது. ஒரு சில மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளன. கிரிவலப் பாதையை சுற்றி உள்ள தொட்டிகளில் குடிதண்ணீர் நிரப்பப்படாத நிலையே இருந்து வருகிறது. தேரோடும் பகுதியான தென்பரங்குன்றத்தில் உள்ள நவீன கழிப்பறை பராமரிக்கப்படாத நிலையில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாதபடி பூட்டிய நிலையில் உள்ளது. இதனால் பவுர்ணமி தோறும் கிரிவலம் வரக்கூடிய பக்தர்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் பங்குனி பெருவிழாவின் மகா தேரோட்டத்திற்கு 2 வாரங்கள் உள்ள நிலையில் கிரிவலப் பாதை முழுமையாக சீரமைக்கப்படாத நிலை இருந்து வருகிறது. இதுகுறித்து பக்தர்கள் கூறும்போது,

கிரிவலப்பாதையில் வயல் சார்ந்த பகுதியில் முட்செடிகள் முழுமையாக வெட்டுவதோடு கால்களில் நெருஞ்சி முட்கள் குத்தப்படாதபடி எந்திரம் மூலம் குறிப்பிட்ட தூரம் ரோட்டை சமப்படுத்தி செம்மண் பரப்பி பக்தர்கள் சிரமம் இன்றி நடந்து செல்ல வசதி செய்ய வேண்டும்.கடந்த ஆண்டில் விநாயகர் தேரில் சேதமடைந்த மின்கம்பம் சாய்ந்தது. ஆகவே சேதமடைந்த மின்கம்பங்களை சீரமைக்க வேண்டும். தென்பரங்குன்றத்தில் அதிநவீன கழிப்பறையை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.கிரிவலப் பாதை முழுவதுமாக தொட்டிகளில் தண்ணீர் நிரப்ப மாநகராட்சி நிர்வாகம் போர்க்காலநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

# அருப்புக்கோட்டை அருகே விபத்து: துணைப்பதிவாளர், டிரைவர் படுகாயம்

அருப்புக்கோட்டை, மார்ச் 25.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே அரசு கார் டயர் வெடித்து லாரி மீது மோதியதில் தூத்துக்குடி கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் சிவ முத்துக்குமாரசாமி 52, டிரைவர் மந்திரமூர்த்தி 46 படுகாயம் அடைந்தனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் திருநாவுக்கரசு நகரச் சேர்ந்தவர் சிவ முத்துக்குமாரசுவாமி. இவர் தூத்துக்குடி கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளராக உள்ளார். சம்பவத்தன்று காலை அரசு காரில் மதுரைக்கு சென்றார். காரை தூத்துக்குடி ராஜூ நகரை சேர்ந்த டிரைவர் மந்திரமூர்த்தி ஓட்டிச் சென்றார். கார் மதியம் 2 மணிக்கு அருப்புக்கோட்டை அருகே பந்தல்குடி வேலாதபுரம் சந்திப்பு அருகில் வரும் போது கார் முன்பக்க டயர் வெடித்தது.

இதில் கார் நிலை தடுமாறி முன்னாள் சென்ற டாரஸ் லாரி மீது மோதியது. இதில் துணை பதிவாளர் முத்துக்குமாரசாமி, டிரைவர் மந்திரமூர்த்தி படுகாயம் அடைந்து அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதுகுறித்து பந்தல்குடி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்



ஒட்டன்சத்திரம், மார்ச் 25-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப் பணித்திட்டத்தின் சார்பில் மாணவிகளுக்கு புற்றுநோய்க் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு கல்லூரி முதல்வர் வாசுகி, தலைமை வகித்தார், சிறப்பு விருந்தினராக மருத்துவர் நிறைமதி புற்றுநோயின் அறிகுறிகள் , அவை ஏற்படுவதற்கான காரணங்களையும், எடுத்துக் கொள்ள வேண்டிய மருத்துவ சிகிச்சை முறைகளையும், மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்,நாட்டு நலப் பணிதிட்ட அலுவலர் யமுனாதேவிநன்றி கூறினார்

